ஜப்பானிய தொழில்நுட்பத்தில்

# ரூ.80 ஆயிரம் கோடி செலவில் 3-வது வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் பணி

## மேலும் 107½ கிலோ மீட்டருக்கு அமைக்க திட்டம்



சென்னை, பிப்.4–

சென்னையில் ரூ.80 ஆயிரம் கோடி செலவில் மேலும் 107½ கிலோ மீட்டர் தூரத்துக்கு ஜப்பானிய தொழில் நுட்பத்துடன் மெட்ரோ ரெயில் பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளி வரும் மார்ச் மாதம் கோரப்படுகிறது.

### புதிய வட்ட ரெயில் பாதை

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க வண்ணாரப்பேட்டை– விமானநிலையம், சென்டிரல் – பரங்கிமலை ஆகிய 2 வழித்தடங்களில் 45 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இதில் நேரு பூங்கா– விமான நிலையம், விமானநிலையம்– சின்னமலை, ஆலந்தூர் – பரங்கிமலை இடையே சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் சேவை தொடங்கி நடந்து வருகிறது. தற்போது புதிதாக 107.55 கிலோ மீட்டர் தூரம் கொண்ட புதிய வட்ட மெட்ரோ ரெயில் பாதை கண்டறியப்பட்டு உள்ளது.

### 107.55 கிலோ மீட்டர்

மாதவரம்– சிறுசேரி இடையே 45.81 கிலோ மீட்டர் தூரம் கொண்ட 3–வது பாதையில் 19.09 கிலோ மீட்டர் உயர்த்தப்பட்ட பாதையும், 26.72 கிலோ மீட்டர் தூரம் சுரங்கப்பாதையும் அமைக்கப்படுகிறது. மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம்– கோயம்பேடு பஸ் நிலையம் இடையே 17.12 கி.மீ. தூரம் கொண்ட 4–வது பாதை முற்றிலும் சுரங்கப்பாதையில் அமைக்கப்படுகிறது. மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே 44.62 கி.மீ. தூரம் கொண்ட 5–வது பாதையில் 7.49 கி.மீ. உயர்த்தப்பட்ட பாதையும், 37.13 கி.மீ. சுரங்கப்பாதையும் அமைக்கப்படுகிறது. ஆக மொத்தம் 107.55 கி.மீ. தூரத்திற்கு ரெயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இந்த திட்டம் ரூ.80 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதற்கு தேவையான நிதியை வழங்குவது தொடர்பாக ஜப்பானில் உள்ள சர்வதேச நிதி ஒத்துழைப்பு நிறுவன அதிகாரிகள், சென்னையில் மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகளை அண்மையில் சந்தித்து ஆலோசனை நடத்தி சென்றுள்ளனர். இதற்கான திட்ட அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவில் அனுமதி கிடைத்தவுடன், இதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை வருகிற மார்ச் மாதம் கோர சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டு உள்ளது.

### ஆய்வுப்பணி

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

வடசென்னையையும், தென்சென்னையையும் மெட்ரோ ரெயில் மூலம் இணைப்பதுடன், சென்னையில் பொதுபோக்குவரத்தை அதிகரிப்பதற்காக மெட்ரோ ரெயில் சேவை விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 3, 4 மற்றும் 5–ம் கட்டமாக 107.55 கிலோ மீட்டர் தூரத்தில் புதிய வட்ட மெட்ரோ ரெயில் பாதை கண்டறியப்பட்டு உள்ளது.

இந்தப்பாதையில் மெட்ரோ ரெயில் பாதை அமைப்பதற்கான ஆய்வுப்பணி நடந்து வருகிறது. இந்த வழித்தடத்தில் 116 மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைப்பதற்கான இடங்களும் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இந்த திட்டத்தை 10 ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டு இருக்கிறது. தரைத்தளத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.150 முதல் ரூ.200 கோடி வரையிலும், சுரங்கப்பாதையில் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.500 முதல் ரூ.600 கோடி வரை செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டு உள்ளது.

இந்தப்பணியில் முற்றிலும் மாறுபட்ட முறையில் ஜப்பான் தொழில்நுட்பம் முக்கிய பங்கை வகிக்க உள்ளது.

### சுரங்கப்பாதை

இதில் முதல் கட்டமாக மெரினா கடற்கரை கலங்கரை விளக்கம்– கோயம்பேடு பஸ் நிலையம் மற்றும் மாதவரம் – சோழிங்கநல்லூர் பணியை முதலில் எடுத்துக் கொள்ளப்படும். இதை ரூ.40 ஆயிரம் கோடி செலவில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு இருக்கிறது. இதில் மாதவரம் முதல் கொளத்தூர் வரை சுரங்கப்பாதையும், கொளத்தூர் முதல் கோயம்பேடு பஸ் நிலையம் வரை உயர்த்தப்பட்ட பாதையும் அமைக்கப்பட உள்ளது.

அதேபோல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை உள்ள 44.62 கி.மீ. தூரம் கொண்ட பணியில் மாதவரம் முதல் டைடல் பார்க் வரை சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது. தொடர்ந்து தரமணி ரோட்டில் இருந்து சோழிங்கநல்லூர் வரை உயர்த்தப்பட்ட பாதையும் அமைக்கப்பட உள்ளது. தேவையான ரெயில்கள் பிரான்ஸ் நாட்டில் உள்ள அல்ஸ்டாம் நிறுவனத்திடம் இருந்து வாங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

2025–ம் ஆண்டுக்குள் பொதுபோக்குவரத்தை அதிகரிப்பதுடன், எளிதில் ஒருங்கிணைப்பு, மெட்ரோ ரெயில் மூலம் சென்னை மாநகரை இணைப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகிறோம். அத்துடன் மாநகரின் எல்லைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு மெட்ரோ ரெயில் ஒரு வரப்பிரசாதம் என்பதும் நிரூபணமாகி இருக்கிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.